உ
சிவமயம்.

வேளாளன்

தூத்துக்குடி.

"மேழிச் செல்வம் கோழை படாது"

வயது 1	1105-ஞ சுக்கில௵ பங்குனி௴ 1௳	மாதம் 12

"அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"

ஆண்டவனருளால் ஆண்டு நிறைவு.

எல்லாம் வல்ல இறைவனருளால் அன்பர்கள் பலர் ஆதரவு கொண்டு நமது "வேளாளன்" இன்றோடு ஓராண்டு நிறைவுறுகின்றான். வேளாளன் ஆண்டு நிறைவுபெறும் இந்நாள்வரை குறித்த காலந் தவறாமலும், உருவிலும் அமைப்பிலும் குறைதலின்றி, அறிஞர் பலர் கட்டுரைகளுடன் அழகுபெற வளர்ந்துவந்தானென்பதில் மகிழாத மக்களில்லை. ஆரம்பமாவதற்கு முன் ஆட்சேபம் கூறிய அன்பர்களும் வேளாளனுக்கு வேண்டுவன விரைந்து செய்தனர். வேளாளனை விருப்புடன் வாங்கி ஆதரித்த அன்பர்கள், கட்டுரைகள் பல வரைந்தனுப்பிய புலவர் பெருமக்கள், நன்கொடை கொடுத்துதவிய கனவான்கள், வேறு பல வேண்டுவன உதவிய விவேகிகள் அனைவருக்கும் நமது வணக்கம் உரித்தாகுக. "தூரத்துப் பச்சை, கண்ணுக்குக் குழுமை" என்றது இயற்கை. இவ்வியற்கைக்கு மாறாக, நாம் வசிக்கும் நகர மக்கள் நூற்றுக்கதிகமாக விருப்புடன் நமது வேளாளனை ஆதரித்தமை குறித்து நாம் மிகமிகப் போற்றுகின்றோம். தூத்துக்குடி நகரம்போல் கொழும்பு நகர மக்களும் நூற்றுக்கதிகமாக வேளாளனை ஆதரித்திருக்கின்றார்களென்பதையும் குறிப்பிடாமலிருக்க

முடியவில்லை. இஃதோடு மற்றொன்றும் தெரிவிக்கவேண்டிய தவசியம். என்னவென்றால், நமது வேளாளன் வெளி வந்தது முதல் இதுவரை, தபால் செலவும் காகிதம் அச்சுக்கூலி வகைக ளுக்கான செலவுந் தவிர; உழைத்த நமக்கு ஒரு பைசாவும் பய னில்லை யென்றாலும், எடுத்த தொண்டு இடுக்கணின்றி இனிது நிறைவுற்றமைகொண்டு நாம் முன்னிலும் முன்னூறு மடங்கு மன ஊக்கம்பெற்று மகிழ்கின்றோம்.

நமது வேளாளன் இரண்டாயிரம் சந்தாதார்களைப் பெற்று விட்டால் சந்தாத் தொகையைக் குறைக்க வசதி ஏற்படும். அதற் குரிய வகையில் மக்கள் ஈடுபட்டு வேண்டுவன இனியேனுஞ் செய்துதர வேண்டுகிறோம். பொருள் போதிய அளவு இல்லையா னால் குறித்த தொண்டொன்றை நடாத்திச் செல்வோர் மனம் தளர்ச்சியடையுமென்பதில் மக்களனைவரும் அநுபவம் பெற்றிருப் பார்கள். நமது மக்கள் அநுபவம் அறிந்தவர்களெனினும் அதனை அடிக்கடி ஆராய்ந்து பார்ப்பதுமில்லை. பிறர் நிலையில் மனதைச் செலுத்துவதுமில்லை. காலச் சக்கரம் சுழன்று விரைந்தோடும் இன்னெருக்கடியான வேளையில் நமது மக்கள் வாளாகிடத்தல் மிக இழிவான நிலையில் கொண்டு சேர்க்குமென இனிமையுடன் இயம்பியதுமன்றி எச்சரிக்கையுஞ் செய்கின்றோம். நமக்கு வாழ் நாள் நடாத்த வியாபாரமிருப்பதால் வேளாளனை நடாத்தி ஊதி யம்பெற நினைக்கவில்லை. நாட்டில் பற்பல சமுகங்கள் முன்னேற முயன்று வருவதுபோல நம் சமுகமும் முன்னேறவேண்டுமென்ற ஒரே கருத்துடன் நமது வேளாளனை நடத்த முன்வந்தோமே யன்றி வேறில்லை. வேளாளனை நடத்தியதில் நமது வியாபார நிலையுங்கூட சிறிது சீர்கேடடைந்திருக்கிறதென்றுஞ் சொல்லலாம். நமது சமுகத்தில், நமது ஜில்லாவிலுள்ள ஜனத் தொகை விதாச் சாரப்படி பார்த்தால் வீடொன்றுக்கு ஒரு சந்தாதாராகப் பார்த் தால்கூட 50,000 சந்தாதார்கள்கூட சேருவது மிக எளிது. ஆனல் வேளாளனின் சந்தாதார் எண்ணிக்கையை வெளியிற் சொல்ல வும் வெட்கம். வேளாளனைப் பெற்றுவருகின்ற மக்களெல்லாப் சந்தாத் தொகையையேனும் செலுத்திவிட்டார்களா? என்றாம்

அதுவுமில்லை. நமது வேளாளன் சமரசமான நிலையில் நடந்துவருவதால் பல சமுக மக்களும் சந்தாதார்களாகச் சேர்ந்திருக்கின்றனர்கள்.

நாள் ஒன்றுக்கு ஒரு பைசா வாகிய மிகக் குறைந்த இரண்டு ரூபாய்ச் சந்தாவைச் செலுத்த மனமில்லாத மக்கள் பூலர் மலிந்த சமுகம் நம் சமுகந் தவிர வேறு இருப்பதாக நாம் நினைக்கவில்லை. பிற சமுகப் பத்திரிகைகளுக் கெல்லாம் பல்லாயிரக் கணக்கான சந்தாதார்கள் இருப்பதாக பத்திரிகாசிரியர்கள் பலர் நம்மிடம் கூறுகின்றனர். நம் மக்கள் "வள்ளன்மையால் மிக்கிருக்கும்" என்பதுபோல் முற்காலத்தில் இயற்கையாக வள்ளன்மையமைந்து "வேளாளர்" எனப் பெயரும் பெற்று ஆன்றோர் அறிவுடையோர் பலரால் பாடல் பாடப் பெற்று வாழ்ந்தனர். தற்காலமோ "வாய் சர்க்கரை, கை கருணைக் கிழங்கு" என்பதுபோல் இனிமையாகவும் சாமர்த்தியமாகவும் பேசுந் திறமையில் தலை சிறந்து விளங்குகின்றோம். ஈதற்றன்மை யில்லையென்றாயிற்று. "வேளாளர் சென்ற வழி வெட்ட வழி" என்றும் இழி பொருளாகவும் யாவரும் பேசும் நிலைக்கு வந்துவிட்டோம். "வேளாண்மை" என்பது விவசாயம், உபகாரம் என்னும் இருபொருளின் இயற்கையமைந்த ஒரு பெருங் கூட்டத்தாராகிய நம் மக்களுக்கு "வேளாளர்" என்னும் பெயர் வந்த தென்றும் ஆராய்ச்சி மூலம் அறியக்கிடக்கின்றது.

இரண்டாவதாண்டிற்கு "வேளாளன்" சந்தாதார்கள் எவ்வளவு பெருகி வருகின்றனரோ அவ்வளவு சந்தாக் குறைவை எதிர்பார்க்கலாம். நடைபெறுமோ பெறாதோ என்று ஐயுற்ற அன்பர்கள் இனியேனும் தெளிவுபெற்றுச் சந்தாதார்களாகச் சேர்ந்து ஆதரிக்கவேண்டுகின்றோம். வேளாளனைப் பெற்று இன்றுவரை ஐயுற்று நின்ற அன்பர்கள், பன்னிரண்டாவது பத்திரிகையாகிய இதைப் பெற்றவுடனாவது தங்கள் சந்தாவை அனுப்பி ஆதரித்து மேலாலும் சந்தாதார்களாகச் சேர்ந்து ஆதரிக்க அன்புடன் வேண்டுகின்றோம் ஆரம்பமான காலமுதல் நிகழ்

பற்பல இடையூறுகளினின்றுந் தப்பி முதலாண்டை நடத்திச் சென்ற நாம் இனி விட்டுவிடப்போவதில்லை யென்பதை முழு மன துடன் அறிவிக்கின்றோம். இதுகண்டது முதலே நம்மக்கள் சந்தாத் தொகைகளை அனுப்பி ஊக்கங் கொடுப்பார்களானால் இரண்டாவதாண்டு வேளாளனை உருவில் பெரிதாக்கி விளங்கச் செய்தவர்களாவார்கள். நமது பிரதிநிதிகள் இரண்டாவதாண் டிற்கு இன்று முதலே மிக ஊக்கத்துடன் உழைத்து வேளாளனை வளர்த்துவர வேண்டுகின்றோம்.

இளைத்த உடலையுடைய நாம் ஐந்து ரூபாய்ச் சம்பளத்திற் கூட ஆள்வைக்க வசதியற்று சகல வேலைகளையும் நானும் என் குடும்பத்தினருமாக மிக ஊக்கத்துடன் பார்த்து வந்தோம். நமது உடல் நிலைக்கு மிஞ்சிய நிலையில் வேலை பார்த்தும் மனநலஞ் சிறி தும் குன்று மகிழ்ச்சியோடு யிருந்தாலும் ஆண்டவனின் அருட் டிறத்தாலும் ஓராண்டு முழுதும் உடல்நிலை குன்றி வேறுபடாமல் நின்றமைக்காக எல்லாம் வல்ல இறைவனின் பொன்னடிகளைப் போற்றிப் புகழுகின்றோம். சுருங்கக் கூறின், நமது வேளாளன் நடைபெற்று வருகின்றது திருவருட்டிறத்ாலன்றி நம் திறத் தால் எள்ளளவும் இயலவில்லை யென்பதைக் கணந்தோறுங் கண்கூடாகக் காண்கின்றோம். சில தினங்களுக்கு முன் அர சாங்க உத்தியோகஸ்தரான நமது சமூக கனவான் ஒருவரைச் சந்தித்து பேசுஞ் சந்தர்ப்பத்தில் வேளாளனிடத்தில் மிகுந்த ஆசை கொண்டு, "உங்களுக்கும் எனக்கும் கருத்து வேற்றுமை யிருக்க லாம், ஆனால் உங்கள் நோக்கம் உயரியதாதலால் வேளாளனை ஆதரித்தலவசியம். இதனை நம்மக்கள் உணர்ந்து ஒழுகவேண்டும். வேளாளனை ஆதரிக்க வேண்டு" மென்று தாம் கருதுவதாகக் கூறினர். இதனை நமது மக்கள் நன்றாய் நினைந்து நடக்க வேண்டு கின்றோம்.

இறுதியாக இயம்புவது என்னவென்றால் யாவரும் வேளாள னுக்குச் சந்தாதார்களாக இதுமுதலே பதிவுசெய்துகொள்ளவும், பணத்தை யனுப்பவும், ஒவ்வொருவர்களும் வேறு ஒருவரைச் சந்

தாதாராகச் சேர்த்துதவவும் வேண்டுகின்றோம். ஒருவாறு சந்தாதாராகச் சேருவதற்கு அசக்தாக உண்மையிலிருந்தால் நமக்கு எழுதிவிடவோ அன்றி இரண்டாவதாண்டு முதல் பிரதியை நமக்கு வாபஸ் செய்துவிடவோ வேண்டுகின்றோம்.

நமது தொண்டு நிறைவேற உதவிபுரியும் ஆண்டவனுக்கும் அன்பர்களுக்கும் மீண்டும் நமது வணக்கம் உரித்தாகுக். வையகம் வாழ்க.

வாங்குவாரில்லையானுல் விற்பாருமில்லை.

பேட்டை. திரு. வா: இராமலிங்கம் பிள்ளையவர்கள்.

மக்களாவார் ஆடை என்பதொன்றை அணிவதெல்லாம் தங்கள் அந்தரங்க பாகங்களை மறைத்து மானங்காப்பாற்றிக்கொள்ளவேயன்றோ? இதுவே பகுத்தறிவுடைமைக்குரிய முதற்செய்கையல்லவா? இவ்வாறாக ஆடையெனும் தன்மை அணுவளவுமில்லாத (அணிந்தால் அங்கமெல்லாந் துலங்கும் பங்கமுறு) துணிகளை மிக ஏறறமான விலை கொடுத்து இங்கிதமாய் வாங்கியணிவது பொங்கிய நாகரீக மயக்கத்தாலமைந்ததேயாகும். ஆடைக்குரிய தன்மை அமையப் பெற்றிலதாயினும் அவற்றைக் கண்ணுக்கினிமையாய்த் தோற்றுவதால் கனபொருள் கொடுத்துக் கொள்வது எரிகின்ற விளக்கின் சுடரை விட்டில் பூச்சியானது கண்ணுக்கழகாய்க் காணப்படுவதால் விரைந்து அதில் விழுந்து தன்னுயிரையே மாய்த்துக் கொள்வது போலாகும். ஏனெனில் அண்மையிலுள்ளார் தொழிலின்மையால் அரைவயிற்றுணவுக்கும் வழியின்றி அலையச்சேண்மையிலுள்ளாரைச் சிறக்கச் செய்வதாலென்க. இது செய்கை தமக்கும் தம் நாட்டிற்கும் இழிவு தருவதாகுமென்பது மொழியாது விளங்கும்.

இது பற்றிப் பேசுங்கால் நம்மில் சிலர்; உல்லாசமான மெல்லிய துணிகள் விற்கப்படுவதால் அவற்றின் அழகைக்கண்டு அளவற்ற பொருளை அள்ளிக்கொடுத்தேனும் வாங்கநேர்கிறது.

அத்தகைய துணிகளை விற்பாரில்லையானால் நாட்டுத்துணிகளை நலமுடன் கொள்ளலாம் என்று சொல்ல முற்படுகிறார்கள். இவர்கள் முற்கூறியபடி விளக்கின் சுடரை அழகெனக் கொண்டன்றோ விட்டில் உயிர்துறக்கின்றதென்பதை உணரவேண்டும். அன்றியும் யாதாமொருசரக்கை விரும்பிக்கொள்வாரில்லையானால் அதனை விற்பாருள்ளாதல் முடியாது. இதனை

> "தினற் பொருட்டால் கொள்ளாதுலகெனின்யாரும்
> விலைப் பொருட்டால் ஊன்தருவாரில்"

என்ற தேவர் திருக்குறள் இனிது விளக்குகின்றது. மாமிசம் தின்பதற்காக வாங்குபவரில்லையானால் விற்பவருமில்லை என்பது இதன்கருத்து. இம்முறையே மற்றெப்பொருளுக்கும் இயையும். எனவே நம்மில் ஒவ்வொருவரும் கடைகளுக்குச் செல்லுங்கால் தங்கள் நன்மையையும், நாட்டின் நன்மையையுங்கருதி ஆடையின் அவசியத்தை அணுவளவும் குறையாது உதவிக் காக்கும் கதர்துணி அல்லது நாட்டுக் கைத்தறிகளில் தயாரிக்கப்பட்ட கண்ணியமான துணிகள் கொடுங்கள் என்று விரும்பிக்கேட்க முற்பட்டால் விற்பவர் அதனை உதவாது மற்றதைப் பெற்றென் செய்வர் ? எனவே நாமனைவரும் அருகிலுள்ளார் தொழில் பெருகிவளரத்தக்க முறையை இனிது கைக்கொள்ளவேண்டும். நாட்டுத் தொழிலைப் போற்றுதல் நம்கடன்.

குலசேகரபட்டினம் செல்வ நிலை.

(பிரைட் பேரல்)

நாம் முன் 265 ஆம் பக்கத்தில் குறிப்பிட்டபடி, நமது முன்னோர்கள் திறைகடலோடியுந் திரவியம் தேடு என்ற முதுமொழிக்கிணங்க வெளியூர்களுக்குச் சென்று, தன் பெரு முயர்ச்சியால், தனவந்தர்களாகவும், ஊரில் ஆதக்கம்பெற்றும் இருந்தார்கள். முன் காலத்தில் வெளியூர்களில் போய்த் தொழில் செய்ததின்

பவனுக, இன்றும் பல குடும்பத்தினரை; கொச்சிபிள்ளை, கண்டி பிள்ளை, பாம்பேபிள்ளை, பட்டணம்பிள்ளை, என்று ஊர் பெயரைச் சொல்லியே அழைக்கின்றனர். ஆனால் அவர்கள் பிள்ளைகளோ, தன் ஊரைவிட்டு வெளிக் கிளம்பாது, அல்லது சமீபத்திலுள்ள இலங்கையை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு, எங்கள் பாட்டனுர் பாம்பேயில் வியாபாரம் செய்தார், எங்கள் தகப்பனுருக்கு தன் ஊத்தில் நிலமிருந்தது, என்று வாய்வேதாந்தம் பேசிக் கொண்டு, எங்கள் சாதிக்கும், எங்கள் குடும்பத்திற்கும், எங்களுக்கும், பெரிய மதிப்பிருக்கிறதென்று எண்ணி; எண்ணி இருமாந்திருக்கின்றனர்.

உலகின் போக்கோ, சாதி வேற்றுமைகள் துலைந்து வருகின்றன. ஆனுல் ஆண் சாதி, பெண்சாதி என்ற இரு பிரிவினை மட்டும் உலகிலிருக்கக் கூடுமென எண்ணி யுள்ளோம். அதற்கும் பெண் சுதந்தரப் போராட்டம் நடைபெறும் தரிதத்தைக் கவனித்தால், கூடிய சீக்கிரத்தில், ஆண் பெண் என்ற அங்க அடையாளங்களைத் தவிர வேறு எவ்வித வித்தியாசங்களும் இல்லாது போய்விடுமென்று எண்ணக் கிடக்கின்றது. இனி செல்வமுள்ள சாதி, செல்வ மற்ற சாதி என இரு பிரிவுகளே நிலை பெறக் கூடும் "பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லதில்லை பொருள்" "பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கும் எண்ணியதேயத்துச் சென்று" என்ற பொய்யா மொழிக் கிணங்க, செல்வம் படைத்தோரே மேல் சாதியாக விழங்கி வருவது நாம் ஒவ்வொருவரும் அனுபவத்திலேயே பல காணக்கூடும். செல்வ நிலையில் பொதுவாக வேளாள சமுகத்தினரும், சிறப்பாக குலசை வாழ் வேளாளரும், மேன்மையற்றிருப்பது வெளிப்படை. செல்வக் குறைவுக்கு முயற்சி இன்மையே காரணமாகும். "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" என்ற திருவாக்கிற்கு நாமே இலக்காகி இருக்கின்றோம். எச்சாதியினர், எத்தேயத்தினர் விடா முயற்சியுள்ளவர்களாக் இருக்கின்றனரோ, அச்சாதியினரே, அந் நாட்டினரே, சீரும் சிறப்பு முற்று

மேன்மை யுறுவர் என்பது வெள்ளிடை மலை. செல்வப் பெருக்கிற்கு முயற்சியே அடிப்படையாகும். செல்வம் கால வேறுபாட்டால் அழிந்து படவும் கூடும். ருஷியதேசத்தினுள்ள போல்ஷ்விக் இயக்கம் உரம் பெற்று எங்கும் பரவுமேல், செல்வமுள்ள சாதி, செல்வமற்ற சாதி என்ற வேற்றுமை நீங்கி முயற்சியுள்ள சாதி, முயற்சி யற்ற சாதி என்ற இரு பிரிவினையில் வந்து அடங்குமென்று உலகப் போக்கின் முறையால் எண்ணக் கிடக்கின்றது.

இனி குலசை வேளாள சமூகத்தினரின் செல்வ நிலை எவ்விதமிருக்கிற தென்பதை ஆராய்வோம். இங்குள்ளார் ஏறக்குறைய எல்லோரும் இலங்கை சென்றே தன் வாழ் நாளைக்கழித்து வருகின்றனர். மேல்நாடுகளில் ஒவ்வொரு வாலிபரும் ராணுவத்தில் சேரவேண்டுமென்ற நியதி இருப்பதுபோல் இவ்வூர் வாலிபர் எல்லோரும் இலங்கை போகவேண்டுமென்ற சட்ட மிருக்குமோ என்று எண்ணும்படி நடை பெற்று வருகின்றது. ஆனால் இலங்கை செல்லுகின்ற இவர்கள் மற்ற வகுப்பினரைப்போல் பணம் திரட்டும் ஆற்றலுள்ளவர்களாகவும் இல்லை. அறிவுள்ளவர்களும், ஊமையர்களும், வீணே பேசாததுபோலவும், நிறை குடமும், வெத்துக் குடமும் ததும்பாதது போலவும் இலங்கை சோப்பேரிகளுக்கும், சுரு சுருப்புள்ளவர்களுக்கும் உரை விட மாக இருக்கின்றது. பொதுவாக இவர்கள் அதிகமான மன உழைப்போ, சரீர உழைப்போயின்றி வெகு ஆடம்பரத்தோடு, பிறர் குற்றங்களைத் தேடிப் பிடித்து உழரிக்கொட்டி, தான் என்ற மமதையுடன் வாழப்பிரியப் படுகின்றவர்கள் பாழும் கொழும்புப் போக்கு வரத்தே இவர்களின் முயற்சியை அடியோடு கெடுத்துவிட்டது. ஒவ்வொருவரும் ஊரை விட்டுப் புறப்படும்பொழுதே, யாரிடமேனும் கணக்கு டிராயிங் வேலைக்கு அமர்ந்து ஊழியம் செய்ய வேண்டுமென்று எண்ணுவார்களே தவிர யாதாமொரு முயற்சி செய்ய வேண்டுமென்ற எண்ணமே எவர் மனதிலும் உதிப்பதில்லை. (தொடரும்)

திருக்குறள் பாயிர ஆராய்ச்சி.

திரு. பொ. முத்தையபிள்ளை அவர்கள்.

இரண்டாம் அதிகாரம் வழி.

இவ்வாறு முதலதிகாரத்தால் கடவுள் வாழ்த்தும் பயனும் கூறிய ஆசிரியர் இரண்டாம் அதிகாரத்தால் இந்நூற்குவழிகூறு கின்றார். வழியாவது, நூலிலே சொல்லப்படும் பொருளுக்கு ஆதாரமாயுள்ளது. சிவஞான சித்தியாரில் சொல்லப்படும் பொரு ளுக்கு ஆதாரமாயுள்ளது சிவஞான போதமாதல் போல, திருக் குறளிலே சொல்லப்படும் பொருளுக்கு ஆதாரமாயுள்ளது மழை யே யாகும். திருக்குறளிலே சொல்லப்படும் பொருள், இல்லறந் துறவறமென்னும் அறமும், பொருளும், இன்பமுமாம். வான் சிறப்பு என்னும் இரண்டாம் அதிகாரத்தில் ஒன்றுமுதல் ஏழு செய்யுட்களால் மண்ணுலகத்துள்ள உயிர்கள் நிலைபெறுதற்கும், எட்டாவது செய்யுளால் கடவுட்பூசை நடைபெறுதற்கும் வேண் டப்படும் உணவுப்பொருள்முதலியவற்றிற்கு மழைஇன்றியமை யாது வேண்டப்படு மென்றதனால் பொருளும், தானம் தவம் இரண்டுந்தங்கா என்றதனால் இல்லறம் துறவறம் என்னும் அற மும், இல்லைம் என்றதனால் இன்பமும் ஆகிய அம்மூன்றற்கும் ஆதாரமாயுள்ளது மழையே யென்பது கண்டுகொள்க.

மூன்றாம் அதிகாரம் அதிகாரி.

இவ்வாறு இரண்டாம் அதிகாரத்தால் நூலிலேசொல்லப்படும் பொருளுக்கு ஆதாரமாயுள்ள மழையின் சிறப்புக்கூறிய ஆசிரியர், மூன்றாம் அதிகாரத்தால் இந்நூல் கேட்டற்குரிய அதிகாரியிவ ரெனக்கூறுகின்றார். இல்லறத்தில் நிற்போர் இல்லறத்தையும், அதற்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருளையும், அப் பொருள் துணையாக தலைவனும் தலைவியும், கூடி நுகரப்படும் இன் பத்தையும் கேட்டற்கு அதிகாரிகளாவர் துறவறத்தில் நிற்போர்

அருளுடைமை முதல் அவாவறுத்தல் ஈறுன துறவறத்தைக் கேட்டற்கு அதிகாரிகளாவர். இல்லறத்தில் நிற்பவர், தமக்குரிய மனைவியையும் பொருள் முதலியவற்றையுமேயன்றிப் பிறர்க்குரிய மனைவியையும் பொது மாதரையும் பிறர்க்குரிய பொருள் முதலியவற்றையும் விரும்பாமையாலும், துறவறத்தில் நிற்பவர் உடல் முதலிய ஒன்றையும் விரும்பாமையாலும் இருவரும் நீத்தார் எனப்படுவர்.

நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்தில் ஐந்தவித்தானது பெருமைக்கு மனைவியோடு கூடிவாழ்ந்த கௌதமனையும், ஐந்த் வியாதவனது சிறுமைககுப் பிறன் மனையாளைவிரும்பிய இந்திரனை யும் எடுத்துக்காட்டினமையால் இல்லறத்தில் தவறாது நிற்பவரும் நீத்தாரெனப்படுவரென்பது துணியப்படுமாறுகாண்க. ஐந்தவித்த லும், யோகப்பயிற்சியும், தத்துவ உணர்ச்சியும் உடையார், மனை வியோடு கூடிஅகத்துறவுடையாராய் வாழினும் வாழ்வர். அகத்து றவோடுகூடிமனைவி முதலிய புறப்பொருள்கள் அனைத்தையும் துறந்து வாழினும் வாழ்வர். ஆகையால் நீத்தார் பெருமையென் னும் அதிகாரத்தால் அகத்துறவு மாத்திரம் உடைய இல்லறத் தாரும், அகத்துறவு புறத்துறவு இரண்டு முடைய துறவறத்தாரு மாகிய இருவகைத் துறவிகளும் கூறப்பட்டன ரென்பது அறிந்து கொள்க. இவர்களே திருக்குறளுக்கு அதிகாரிகளாய் பிறருக்கு உறுதிப் பொருள்களை உணர்த்துதற்கு வல்லவராவர்.

நான்காம் அதிகாரம் பொருள்.

இவ்வாறு மூன்றும் அதிகாரத்தால் நூலுக்கு அதிகாரியாகிய நீத்தா பெருமை கூறிய ஆசிரியர், நான்காம் அதிகாரத்தால் நூலிலே சொல்லப்படும் பொருள் இதுவெனக் கூறுகின்றார் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றும் நூலிலே சொல்லப் படும் பொருள்கள். ஆயினும், பொருளும் இன்பமும் போலா காது அறம், இம்மை மறுமை வீடு என்னும் மும்மையும் பயத்த லானும், பொருளும் இன்பமும் அறத்தின் வழிப்படுதலானும் அறமே சிறப்பாகச் சொல்லப்பட்ட பொருளாகும். இக்கருத்துத் தோன்றுதற்காகவே அறன்வலியுறுத்தலென அதிகாரப்பெய ரிட்டனர்.

முடிவுரை.

இது வரையுங் கூறியவாற்ருல் திருக்குறளிலே பாயிரமாகக் கூறப்பட்ட நான்கு அதிகாரங்களுள், முதலதிகாரத்தால் கடவுள் வணக்கமும் திருக்குறளைக் கற்றதனுலுண்டாம் பயனும், இரண்டாம் அதிகாரத்தால் திருக்குறளிலே சொல்லப்படும் அறம் பொருள் இன்பங்களுக்கு வழியாயுள்ள மழையின் சிறப்பும், மூன்ரும் அதிகாரத்தால் திருக்குறளைக் கேட்டற்கு அதிகாரியாகிய நீத்தார் பெருமையும், நான்காம் அதிகாரத்தால் திருக்குறளிலே சிறப்பாகச் சொல்லப்பட்ட பொருளாகிய அறன்வலி யுறுத்தலும் ஆசிரியர் தாமே அருளிச் செய்தனரென்ற வாறும்.

பாயிர ஆராய்ச்சி முற்றிற்று.

கோகில ரங்கன்.

கரிசூழ்ந்தமங்கலம், திரு. T. K. அரிஹர புத்ர சர்மா அவாகள்

(முன் தொடர்ச்சி).

கோகிலம்:—சுந்தரம்! நான் என்னசொல்லியும், உன் மனது சமாதானப் படவுமில்லை. நீ அறிந்து கொள்ளவுமில்லை. இந்த பாவி அரக்கன் செய்த கொடூரமான செய்கையிலிருந்தல்லவா இவள் ஒருவழிக்கும் வருகிருளில்லை.

சுந்தரம்:—உன் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை யில்லை. உன் குல தெய்வத்தின் மேலாணைப்படி எனக்கு யாதொரு தீங்கிழைப்ப தில்லை யென சத்தியம் செய்து கொடுப்பாயானுல் உன்னைப் பார்க்கிறேன்.

கோகிலம்:—சுந்தரம்! நீ யாது செய்வாய்! உன்னைச் சூழ்ந்திருக்கும் பயம் இப்படி யெல்லாம் உன்னை ஆட்டுகிறது. என் குல தெய்வத்தின் மேலாணைப்படியும், பெற்றதாய் தந்தையின் மேலாணைப் படியும், என் மேலாணைப்படியும், நான் சொல்லுவ

தெல்லாம் உண்மை. எப்படியும் உன்னைக் காப்பாற்றுகிறேன். இதற்குள் கோகிலம் வாளை யெறிந்தும் துணியினால் தன் மேல் படிந்துள்ள கரிகளை ஒருவாறு நீக்கி தனது சுய ரூபத்துடன் விளங்கினாள்.

சுந்தரம்:—சகோதரி! என் ஆருயிர் தோழியே! நான் உன்னை பலவாராக நினைத்து தூஷணை முதலானதுகள் பேசினேன். அதற்காக என்னை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோகிலம்:—அதற்கென்ன! நீ அறிந்து ஒன்றும் சொல்லவில்லை. நான் அதைப்பார்த்து சந்தோஷ மடைந்தேனே தவிர கொஞ்சம்கூட கோப மடையவில்லை. ஆகையினால் தயவுசெய்து உன் விருத்தாந்தத்தைச் சொல்லுவாயானால் நான் உன்னை காக்கிறேன் என்று அமுதமான வார்த்தையை மொழியலானாள்.

சுந்தரம்:—சகோதரியே! தயவுசெய்து இவ்விதமான வார்த்தையை இனிதொரும் புகலுவீர்களானால் என் மன மானது வேதனை அடையும், ஆகையினால் தாங்கள் தயவுசெய்து என்னிடம் இவ்விதமான வார்த்தைகளை சொல்லாதிருக்கும்படி நான் பல தரம் தங்களை வேண்டிக் கொள்ளுகிறேன் நான் தங்களுக்குக் கீழ்ப்பட்டவளே. நான் உங்கள் தயவை எதிர் பார்த்துக்கொண்டிருப்பவள். நான் என்னுடைய விருத்தாந்தத்தை சொல்லுகிறேன். நான் கலிங்க நாட்டு மன்னனின் புத்திரி! என் பேர் சுந்தரம். எனது தந்தைக்கு நான் ஒரு பெண் தான். எனக்கு வயது இப்பொழுது சுமார் பதினேழு இருக்கும். நான் ஒருநாள் அஸ்தமனமாகும் சமயம் சுமார் ஆறு மணி யிருக்கும். அந்த சமயம் நல்ல பரிமளங்கூடிய தென்றல் காத்து ஜில் என்று வீசிக்கொண்டிருந்தது. அவ்வமயம் எங்களது அரண்மனையில் அமைக்கப்பட்டிருக்கும் உப்பரிகையின்னுள்ள சோபா வொன்றில் சாய்ந்து படுத்திருந்தேன். சற்று நேரத்தில் அவ்விதமே அயர்ந்து விட்டேன். பிறகு இந்த பாபியின் உபாயத்தினால் இவ்வரண்மனையிலிருக்கக் கண்டேன். இந்த சண்டாளனையு மருகில் கண்

டேன் என் மனதில் ஒருவிதமான திகில் ஏற்பட்டது. உடனே எனக்கு ஒன்றுமே தோன்றவே இல்லை. பின்பு இப்பாவியால் என்னை எழுப்பக்கண்டேன். தன்னுடன் சேரும்படி தொந்தரவு செய்தான். நான் ஒரு நோன்பு உண்டென்றும், அது முடிய சுமார் ஒரு மாதம் பிடிக்கு மென்றும் அவனிடம் தெரிவித்தேன். அவன் சந்தோஷமடைந்து ஒத்துக்கொண்டு போய்விட்டான். நான் இவ்விடத்திற்குவந்து சுமார் இன்றோடு பத்துநாள் ஆகிறது. இன்னும் எனக்கு விவாகமாகவில்லை. எனது தந்தைக்கோ வயது சுமார் அறுபதிருக்கும். எனது தாய்க்கு சுமார் முப்பத்தைந்து வயதிருக்கும். ஆகையினால் நான் இந்த பாவியிடமிருந்து தப்பிப்போகவழி ஏதாவது தெரிந்தால் அதன்படி நடக்க தயாராயிருக்கிறேன். இதுதான் எனது விர்த்தாந்தம். எப்படியும் என்னை காப்பாத்துவது உன்னுடைய கடமையென்று சொல்லும் சுந்தரத்தின் இருகண்களிலிருந்தும் நீர்த்துளிகள் ஓர் பெரிய ஆறுபோல் ஓட ஆரம்பித்துவிட்டது. இதைப்பார்த்த கோகிலம் சுந்தரம்! என்று அழைத்து தனது முந்தானியின் நுனியால் கண்ணீரைத் துடைத்து பயப்படாமலிரு! எப்படியும் நாளையதினமே இவ் வர்ண்மனையை விட்டு வெளியேறும் உபாயத்தை தெரிவிக்கிறேன் என்று தைரியமான வார்த்தைகளைச்சொல்லி சுந்தரத்தின் மனதைத் தேற்றிக்கொண்டிருந்தாள்.

4-வது அத்தியாயம்.

சந்நியாசி வேஷம்.

அண்டபிண்ட சராசரமனைத்தையும் ஏக சக்கிராதிபதியாய் தினம் தினம் பன்னிரண்டு மணி நேரம் ஆண்டு சர்வ ஜீவராசிகளையும் ரக்ஷித்து, சந்தோஷத்தையும், சமமாகப் பாவித்து, அவைகள் பயந்து பல பல இடங்களில் அடங்கிக் கிடக்குமாறு செய்துகொண்டிருந்த இருள் நீங்குமாறு கதிரவன் கீழ் திசையில் கோடி சூரியப் பிரகாசத்துடனும், தங்கக்கொழுப்போலும், பளபளவென்ன மின்னலொளிபோல் தனது முழு அதிகாரத்துடன் கதிரவன் உதயமானான். எங்குபார்த்தாலும் வெளிச்சம் பாவின. எல்லா மனி

தர்களும் சுறுசுறுப்புடன் தங்கள் தங்கள் வேலையை செய்யுமாறு உற்சாகத்துடன் வெளியில் பிரவேசிக்கலானார்கள். இரவு முழுவதும் நடந்துவந்த அலுப்பினால் ஓர் மரத்தடியிலுட்கார்ந்து சிரம பரிகாரத்தைத் தணித்துக்கொண்டு இரு சந்நியாசிப் பெண்களும் ஒருவாறு சந்தோஷமடைந்து மறுபடியும் நடக்கலானார்கள். பட்சி ஜாதிகளும் தங்கள் தங்கள் சிங்காரமான தொனிகளைக் கிளப்பிக்கொண்டும், இறகுகளைப் பட படவென அடித்துக் கொண்டும், உயரப் பறந்து தனது தொழிலை நடத்தத் தலைப்பட்டன. அதில் சில பட்சிகள் ஒரு கிளையினின்று மற்றொரு கிளைக்குத் தாவிக்கொண்டும், வெகு அலங்காரமாகவும், பார்ப்போர் மனதை ரமிக்கச் செய்துகொண்டுமிருந்தன. முன்னத்தியாயத்திற் சொல்லிவந்த இரு பெண்களும் சந்நியாசி வேடமணிந்துகொண்டு அந்த பூதத்தின் அரண்மனையினின்றும் புறப்பட்டுக் கானக மார்க்கமாக வரும் சமயத்தில் தவசிகளின் மனதைச் சந்தோஷமடையுமாறு காற்றும் ஜில்லென வீசிக்கொண்டே இருந்தது. அந்தச்சமயத்தில் இருவர்களும் பின்வருவதுபோல் சம்பாஷிக்கலானார்கள்.

(தொடரும்.)

மேல்நாட்டு வாழ்க்கை.

திரு. ந. சண்முகசுந்தரம்பிள்ளையவர்கள், M. A.,

லண்டனுக்கு முதல் முதலாகப் போகிறவர்களுக்கு அந் நகரின் அழகிய அமைப்பே தெற்றெனத் தோன்றுகிறது. தெருக்களெல்லாம் நேர் ஒழுங்காகவும் சுத்தமாகவும் இருக்கின்றன. இந்நாட்டிற்போல், லண்டனில் அவ்வளவு வளைந்த தெருக்களும் குறுகிய சந்து பொந்துகளும் கிடையாது. தெருக்களில் இரண்டு பக்கங்களிலும் நடைபாதைகள் செவ்வையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. வண்டி முதலியவைகளின் போக்கு வரத்து மிகுதியாக இருந்தபோதிலும் தெருக்களில் குழிகளும் கொடிகளும் அதிகமாக ஏற்படுவதில்லை. மேல்நாட்டு சீதோஷ்ண ஸ்திதி இதற்கு ஒரு காரணமாக இருப்பினும், Country Council

போன்ற சங்கத்தார் இவ் விஷயத்தில் எடுக்கும் சிரத்தையே இதற்கு முக்கிய காரணமாகத் தோற்றுகின்றது. வீடுகள் ஏறக் குறைய ஒரே மாதிரியாகவும் ஒன்று முன்னும் பின்னுமாக இல்லா மல் ஒரே வரிசையாகவும் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளில் சாதாரணமாக வேலைப்பாடான கட்டடங்கள் இல்லாதபோதிலும் வெளித் தோற்றத்தில் அவைகள் காட்சிக்கு இனிமையாக இருக் கின்றன. தெருக்களில் எப்பொழுதும் மின்சார விளக்குகளின் பிரகாசமே இருந்துகொண்டிருக்கும். ஒரு நாளைக்கு நான்குமணி நேரத்துக்குமேல் சூரிய வெளிச்சத்தை அறியாத அந் நகரங்கள் எவ்வளவு வெளிச்சமாகவும் சுகாதாரமுடையவைகளாகவும் இருக் கின்றன என்பதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது. சூரிய கிரணங்கள் இயற்கையாகவே அசுத்தமான நோய்ப் புழுக்களை நாசம் செய்வதால் சுகாதாரத்துக்கு சிறந்த கருவிகளாய் இருக் கின்றன. இச் சூரிய கிரணங்கள் அதிகமாகப் படாததும், படும் பொழுதும் அதிக வெப்பம் இல்லாததுமான மேல்நாட்டு நகரங் கள், இந்த தேசத்திலுள்ள பட்டணங்களைவிட பன்மடங்கு அதிக சுகாதாரமாய் இருக்கின்றன என்றால் அதற்கு அவ்விடங்களி லுள்ள நகரசபையாரின் ஊக்கமும் சாதாரண வெள்ளைக்காரனின் சீரிய சுகாதார உணர்ச்சியுமே காரணமாகும்.

பொதுவாக ஆங்கிலேயர்கள் தங்களுக்குள்ளும் பிறரிடத் திலும் மிக ஒழுங்காகவும் மரியாதையாகவும் நடந்துகொள்ளு கிறார்கள். முறையல்லாத காரியங்களையும் தனது அந்தஸ்த்துக்கு ஏகாத காரியங்களையும் அவர்கள் அநேகமாய் செய்வதில்லை. சாதாரணமாக ஒரு ரயில்வே ஸ்டேஷனில் டிக்கட்டு வாங்குவதை கவனிப்போமானால் மேல் நாட்டாருக்கும் நம் தேசத்தவருக்கும் பழக்க வழக்கங்களில் எவ்வளவு அடிப்படையான வித்தியாசம் இருக்கிறதென்பதை அறிந்துகொள்ளலாம். நம் நாட்டில் டிக் கட்டு வாங்கவேண்டுமானால் கதவு திறக்கப்பட்ட உடனே ஜனங் கள் ஒருவர்மேல் ஒருவராக நான் முந்தி நீ முந்தி என்று நெருக் கித்தள்ளி சச்சரவு செய்வதை நாம் தினசரி பார்க்கிறோம். இம் மாதிரி சந்தர்ப்பங்களில் ஆங்கிலேயர்கள் ஒருபொழுதும் நெறுக்

கித்தள்ளுவதில்லை. எவ்வளவு நேரம் காத்திருக்கவேண்டியிருந்த போதிலும்சரி ரயில் தப்பிவிட்டாலும்சரி அவர்கள் ஒருவரின் பின் ஒருவராக வரிசைக்கிரமமாகவே டிக்கட்டு வாங்கிக்கொள்ளு வார்கள். ஆனால் மேல் நாட்டில் ஸ்டேஷன்களில் மிகத்துரித மாகவும் டிக்கட்டுக்கொடுக்கவேண்டிய வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. "முதலில் வந்தவர்களுக்கு, முதலாவது" (First come, first served) என்னும் கொள்கையை மிக கண் டிப்பாய் அனுசரித்து வருவதில் சில சமயங்களில் நமக்கு விரோத மாகவும் விபரீதமாகவும் தோற்றும். உதாரணமாக சென்ற வருஷம் Wimbledonல் நடந்த யோட்டிப் பந்தாட்டத்தின் கடைசித் தினத்தன்று, கதவுகள் திறப்பதற்குப் 12 மணி நேரத்துக்கு முன் னுலேயே டிக்கட்டு கிடைக்குமோ கிடைக்காதோ என்று நினைத்து ஜனங்கள் காத்திருந்தனர். லண்டனில் மேற்கு பாகத்தில் நடந்த ஓர் உயர்தர நாடகத்தைப் பார்ப்பதற்காக ஒரு கிழவி 20 மணி நேரம் நாடகக்கொட்டகைக்கு வெளியில் சாக்கலேட் ஸாண்டு விச் முதலியவைகளைத் தின்றுகொண்டு காத்திருந்தாள் என்று நாம் பத்திரிகைகளில் படித்திருக்கிறோம். பார்லிமெண்டில் காமன்ஸ் சபையின் கூட்டங்களைப் பார்க்கச் செல்லுவோருக்கும் கூட இவ்வாறே வரிசைக் கிரமமாகத்தான் இடமுள்ள வரையில் உள்ளே செல்ல அனுமதி கொடுக்கப்படுகின்றது. எந்த சமயத் திலும் ஜனங்கள் ஒருவரை ஒருவர் நெருக்கித் தள்ளுவதில்லை யென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலேயருடைய நாணயம் மிகவும் போற்றத்தக்கதா யிருக்கின்றது. பகற் கொள்ளை, மோட்டார்கொள்ளைகளைப்பற்றி நாம் பத்திரிகைகளில் வாசிக்கின்றோம். ஆனால் இன்னவர்கள் அற்பசொற்பமாகவும் பெரும் பாலும் வேறு வெளியிடப்படாத காரணங்களைப்பற்றியுமே இருக்கும். கேவலம் சொற்ப காசு பணத்துக்காகச்சில்லரை திருட்டுகள் அதிகமாக செய்யப்படுவ தில்லை. ஒவ்வொரு நாளும் விடியற்காலம் வீட்டுக்காரர்கள் எழுந் திருப்பதற்கு முன்னாலே பால்காரன் பால்ப்புட்டிகளை கொண்டு வந்து கணக்கு புத்தகங்களில் பதிந்து, புஸ்தகத்தையும் பால்

புட்டிகளையும் வாசல் நடையில் வைத்து விட்டுச்செல்லுவான். அதையாரும் தொடமாட்டார்கள். விழித்தெழுந்தவுடன் வீட்டுக்காரர்கள் அதை உள்ளே எடுத்து செல்லுவார்கள். நம் நாட்டிலோ பழைய செருப்புகள் வாசலில் கிடந்தாலும் கூட திருட்டுப்போய்விடும்.

ஆங்கிலேயர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது காலையில் Good Morning என்று சொல்லத்தவறமாட்டார்கள். பனியிலும் குளிரிலும் விரைத்துக்கொண்டு இருக்கும் பொழுது கூட Good Morning என்று அவர்கள் சொல்லிக்கொள்வது நமக்கு வேடிக்கையாகத்தோன்றும் இயற்கையில் எவ்வாறு இருந்த போதிலும் வெளித்தோற்றத்திற்கு சொல்லளவிலாவது அவர்கள் முறையாகவும் மரியாதையாகவும் காட்டிக்கொள்ளும் சாமர்த்தியம் அவர்களுக்கு இரம்ப உண்டு இவ்வாறே Thank You என்று சொல்லும் வழக்கமும் சந்தர்ப்பம் அன்னியில் வழங்கப் பட்டு வருகின்றது. கூலிக்கு வேலைசெய்யும் ஒருவன் தன் கூலியைப்பெற்றுக்கொள்ளும் போது Thank You என்று சொல்லுவான். அவ்வாறே கூலிகொடுப்பவனும் திரும்ப Thank You என்று செல்லுவது வழக்கம். தெருக்களில் நடக்கும் பொழுதோ Tram, bus ல் போகும் போதோ ஒருவரை ஒருவர் தற்செயலாய் தொட்டுவிட ஏற்பட்டு விட்டால் உடனே அவர்கள் மிகவினய மாக மன்னிப்புக் கேட்டுக்கொள்வார்கள். அற்பக்காரியங்களையும் அவர்கள் பெரிதாக நினைத்து வந்தனமும் மன்னிப்புகளும் கேட்டுக்கொள்வதைப் பார்த்தால் நமக்கு மிகவும் அசம்பாவிதமாகத்தெரிகிறது. (தொடரும்)

"வேளாளன்."

ரிட்டார்டு டிப்டி கலெக்கடரும், சென்னை சட்டசபை அங்கத்தினரும், எட்டயபுரம் சமஸ்தான திவானுமான திரு. எஸ். டி. ஷண்முகம் பிள்ளை யவர்கள் எழுதியது.

இப்பத்திரிகை சென்ற ஒருவருடகாலமாக மாதந்தோறும் குறித்த காலத்தில் செவ்வனே நம்மிடம் வந்துலாவுகின்றது.

இதன் ஆசிரியர் நம் வேளாள குலசிரோமணியே. பத்திரிகையின் நோக்கம், சுமார் நூறு ஆண்டுகட்கு முன்னர் நமது வேளாள குலத்துப் பெருமக்கள் தெய்வபக்தி, சைவப்பற்று, சாஸ்த்திர ஆராய்ச்சி, சத்தியம், நீதி, கருணை, ஈதல் முதலிய பரந்த எண்ணமும் செய்கையும் பரவி வாழ்ந்தனரென்றும், தற்காலம் பலவிதத்திலும் தாழ்வுற்றிருக்கின்றார்களென்றும், அதனை நிவிர்த்திக்க வழி தேடுவதும், அவ்வழி நின்றொழுகுவதுமேயாகும். விரைவில் "வேளாளன்" பத்திரிகையால் நம்மக்களுக்கு பெரிய நன்மை விளையுமென எண்ணுகின்றேன்.

ஆகையால் நமது குலசிகாமணிகள் அனைவரும் "வேளாளன்" பத்திரிகைக்குச் சந்தாதார்களாகச் சேர்ந்து ஆதரிக்கவும், பத்திராசிரியரவர்களுக்கு நன்றிகூறவும், கடமைப்பட்டுள்ளார்கள். இஃதோடு கிராமங்கள் தோறும் வேளாளர் சங்கம் நிறுவி பிரசங்கங்கள் வாரந்தோறும் நடைபெறச்செய்து சைவத்தையும் தமிழையும் வளர்க்கவேண்டிய தவசியம்.

கடவுள்துணை அவசியமில்லை.

சுயமரியாதை

நாத்திகப் பகுத்தறிவுப் பள்ளிக்கூடம்.

பொய்யும் புனைந்துரையும் நீக்கி உண்மைப்படிப்புக் கற்பிக்கும் நோக்கத்தோடு நாட்டப்பட்டது.

தலைமை உபாத்தியாயர்:—உலக ஞாயிறு—தம் மாணவர்களை நோக்கி, எனதருமை மாணவர்களே! அடுத்துவரும் ஆன்னிவெர்ஸரி (வருடோற்சவ) தினத்தன்று நமது பாடசாலைக்கு மூன்று மெடல் கொடுப்பதாய் நம் டைரெக்டர் ஜெனரல் அவர்களின் உத்திரவு வந்திருந்ததைப் போன வாரமே தெரிவித்திருந்தேன். இன்று அப்பரிசுக்குரியோர்களை வடித்தறிதல் வேண்டுமாதலால், உங்கள் புலமையின் வலிமையை வெளிப்படுத்துவீர்களாக. (நீங்கள் கூறுவன எவ்வகையினும் எவராலும் மறுக்கப்படாதவையாயிருத்தல் வேண்டும். ஜாக்கிரதை)

முதல் மாணவன் :—நுண்மாணுழைபுலம்: ஐயா! அடியேனது ஆராய்ச்சி பின்வருமாறு:—நமது நாத்திகப் பெரியார் பொருள்களில் (விஷயங்களில்) ஆராய்ச்சி செய்கின்றனர். சிறுவர்களாகிய நாங்கள் சொற்களில் ஆராய்ச்சி செய்கின்றோம். நான் கண்டவர்களில்,

பவணந்தி முதல் முட்டாள்.

அவன் இலக்கணம் செய்வதாகப் பேர்வைத்துக்கொண்டது பெரிதும் நாணுத்தருகிறது. அது, "குருடன் பெயர்வழிகாட்டி" யென்பதுபோலிருக்கின்றது. அவன் எடுத்த அடியிலேயே வழுக்கி விழுந்துவிட்டான். நன்னூல் எழுத்ததிகார முதற் சூத்திரத்தில் "நன்கு இயம்புவன் எழுத்தே" என்கின்றான். இயம்புவன் என்றால் சொல்வேன் என்று அர்த்தம். சொல்லுதலாவது வாய் திறந்து பேசுவது. இங்கே அவன் பேசவில்லை. எழுதுகிறான். எழுதலாவது:—எழுது கருவியால் ஏட்டில் வரைவது. சொல்லுவது வேறு; எழுதுவது வேறு. இந்த இரண்டு செய்கைக்கும் வேறுபாடு அறியாத மடையனா ஒரு இலக்கண நூலாசிரியனாயிருப்பரன்? ஆகையால், நமது பகுத்தறிவுப் பள்ளிக்கூடத்தில் சுயமரியாதைத் தமிழிலக்கணம் ஏற்படும் வரையில், அந்த நன்னூற் சூத்திரத்தை "நன்கு எழுதுவன் எழுத்தே" என்று திருத்தி வைக்கவேண்டும்.

உபாத்தியாயர்:—பலே! பலே! அப்படித்தான். சென்னையில்கூட ஒரு பரீட்சாதிகாரிகள் கூட்டத்தில் (Examiner's Board) "இதற்கு விடை கூறுக" என்ற ஒரு தமிழ்ப்பண்டிதரது கேள்விப் பத்திரத்தை பார்த்து, ஒரு பி. ஏ. பட்டதாரி, எள்ளி நகையாடி "இதற்கு விடை எழுதுக" என்று திருத்தினாராம். அவ்வளவு அறிவு, இளைஞனை உனக்கு வாய்த்தது அருமை! அருமை!! நீ வயதில் அப்பட்டதாரியினும் மிக்குவிளங்குவாய். அடுத்தவர்,

மற்றொரு மாணவர்:—பல்கலைக் குரிசில்: ஐயா! நான் கண்டவர்களுள், திருவள்ளுவர் ஒகு முட்டாள். "நன்னீரை

வாழியனிச்சமே" என்று எழுதியிருக்கிறார். அவர்தான் முட்டாளாயிருந்தால் தலைவனைக்கூட முட்டாளாகச் செய்யலாமா? "ஒரு தலைவன் ஒரு அனிச்சப் பூவைப் பார்த்து ஏ! அனிச்ச மலரே! நீ நல்ல மென்மைத் தன்மையை யுடையாய்" என விளித்தான் என்பதே இதன் கருத்தாம். என்ன! திருவள்ளுவரைப்போன்ற ஒரு முட்டாள் இனிப் பிறக்கவாபோகிறான்? பூவுக்கு முதலாவது; காது உண்டா? ஒருவன் சொல்வதைக் கேட்டறிய அதற்குத் திறமையுண்டா? அல்லது மனம்தான் உண்டா? அவனுக்கு அது பதில் சொல்லுமா? இதை யெல்லாம் யோசிக்குமிடத்து அந் நூலைக் கொழுத்திவிட்டுப் புதியதொரு ஒழுக்க நூல் காலத்துக் கேற்ற முறையில் வெளியிடவேண்டுமென்று தோன்றுகிறதே.

உபாத்தியாயர்:—சரி; மிகவும் சரி; அடுத்தவர்:—இன்னொரு மாணவர்:- தூயமுழு அறிவு:

நான் கண்டவர்களுள்,

மாணிக்கவாசகர் ஒரு முட்டாள்.

அவர் பாடிய திருக்கோவையாரில் "காய்சினவேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து" என்னும் பாடலில், வேலைச் "சினவேல்" என்கிறார். சினம் என்றால் கோபம் என்று பொருள். வேலுக்காவது, கோபமாவது! வேல் ஜடப்பொருளாயிற்றே. அது கோபிக்குமா?

வேல் என்பது இரும்பினாலாகிய ஒரு கருவி. அது ஒருவரை கோபித்தலும் செய்யாது; மகிழ்தலும் செய்யாது என்பதைச் சின்னஞ்சிறுவரும் அறிவர். சிறுவருக்குள்ள அறிவும் குறைந்த ஒருவரை ஞானியென்பதும், அவர் நூலைப்பாராட்டுவதென்பதும் எவ்வளவோ அநாகரீகம். இவையெல்லாம் என்றைக்கு ஒழியுமோ அன்றுதான் நம் நாட்டிற்கு உண்மைப்பகுத்தறிவு குடியேறும் நன்னாளாம்.

தலைமை உபாத்தியாயர்:—பேஷ்! பேஷ்!! நமது பாடசாலையில் அனைவருமே பகுத்தறிஞர். இம் மூவரும் அவருள் திலகம். (உடனே மேலாவுக்குக் கடிதம் எழுதுகிறார்.)

கடிதம்

சுயமரியாதை நாத்திகப் பகுத்தறிவுப் பள்ளிக்கூடங்களின் டைரக்டர் ஜெனரல் அவர்களின் திவ்யசமுகங்கட்கு:—

ஐயா! எனது பாடசாலையின் மாணவர்களில், நுண்மாணுழைபுலம, பல்கலைக்குரிசில், தூய முழு அறிவு என்னும் மாணவர் மூவரும் தங்கமெடல் பெறத் தகுதியுடையவ ரென்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொண்டிருக்கின்றேன்.

சுயமரியாதை நாத்திகப் பகுத்தறிவுப் பள்ளிக்கூடம்.
6—3—30

இங்ஙனம்,
உலகஞாயிறு,
தலைமையுபாத்தியாயர்.

பின்னொரு மாணவர்:—பகுத்தறிவு. (தலைமை உபாத்தியாயரைப் பார்த்து) ஐயா! தாங்கள் கூடத் தவறிவிட்டீர்கள். "இம் மூவரும் திலகம்" என்றீர்களே—இவர்கள் திலகமா? திலகம் போன்றவர்களா?

தலைமை உபாத்தியாயர்:—ஆம், ஆம். நான் தவறிவிட்டேன்; முட்டாள்கள் தாம தங்கள் தவறுகளை ஒத்துக்கொள்வார்கள். திலகம் போன்றவர்கள் எனல்தான் சரி.

பிறிதொரு மாணவர்:—நாத்திகப் பகுத்தறிவு:-
ஐயா! நமது பகுத்தறிவுகூடத் தவறிவிட்டான். மாணவரைத் திலகம் போன்றவர் என்று எப்படிக் கூறலாம்? திலகம் என்பது நெற்றியிலணியும் பொட்டு. அது தண்ணீரில் குழையும்; விரலிலாவது, குச்சியிலாவது கொள்ளப்படும். அதுபோல் இவர்கள் தண்ணீரில் குழைவார்களா? விரலிலாவது இவர்களைத் தூக்கமுடியுமா? ஒரு நெற்றியில் கொண்டுபோய் இவர்களை யொட்ட முடியுமா?

தலைமை உபாத்தியாயர்:—சபாஷ்! நாத்திகப் பகுத்தறிவு நீயோ போறிஞன். பின் என்ன சொல்லவேண்டும்?

நாத்திகப் பகுத்தறிவு:—இவர்கள் திலகம் என்பதும், திலகம் போன்றவர்களென்பதும் முட்டாள் தனம். இவர்கள் சிறந்தவர் என்பதே பகுத்தறிவிற்குரிய வார்த்தை.

தலைமை உபாத்தியாயர்:—இதோ, இன்னொரு மெடலுக்கு எழுதி அதை உனக்குத்தரச் சிபார்சு செய்வேன்.

அ. கந்தசாமிப் பிள்ளை.
சிவநேசன்.

மகாத்மா காந்தியடிகள்..

நாம் பரஸ்பரம், ஒருவர்க்கொருவர் நம்பிக்கைகொள்ளவேண்டும். இறுதியில் நம்மிடத்திலும் நமது ஆண்டவனிடத்திலும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

குறித்த ஒரு குற்றத்தை அதைப் பரிகரிக்க முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தால், என் ஆன்மா ஒரு போதும் திருப்தியடையாது.

சுதந்திரம் பெற்ற வாழ்வு நமக்கில்லையானால், நாம் இறந்து போவதில் திருப்தியடைய வேண்டும்.

என்னைப் பொறுத்த மட்டில் மதமின்றி அரசியல் இல்லை. மதமின்றிய அரசியல், மரணவலையே யாகும். ஏனென்றால் அஃது ஆன்மாவைக் கொன்று விடுகிறது.

துவேஷம் எப்பொழுதும் கொல்லும் சக்தியையுடையது அன்போ என்றும் அழியாதது. இரண்டுக்கும் இவ்வளவு வேற்றுமை இருக்கிறது. அன்பினால் அடைவது என்றும் நீடித்து நிற்கும். துவேஷத்தினால் பெறுவது நமக்குப் பெருஞ் சுமையாகவே இருக்கும் துவேஷம் துவேஷத்தையே வளர்க்கும். துவேஷத்தைக் குறைத்து அன்பை வளப்பதே மனிதனின் கடமையாகும்.

இந்திய அரசியல் விஷயங்களில் களங்க மற்ற உண்மையும் நாணயத்தையும் உண்டுபண்ண முடியும் என்று நம்புகிறேன்.

இந்தியர்களின் சுதந்திரப் போரில் உண்மையும் அஹிம்சையுமே நமது ஆயுதங்களாகும்.

குண்டுகள் நம்மீது பொழியப்பட்டபோதிலும் நாம் உண்மையைச் சொல்லவேண்டும். துப்பாக்கி முனைகளின் எதிரிலும் நாம் ஒற்றுமைப் பட்டவர்களாயிருக்கவேண்டும்.

என்னுடைய மதத்திற்கு ஒரு வரம்பு இல்லை. என் மதத்தில் எனக்கு உண்மையான நம்பிக்கை இருக்குமானால் இந்தியாவின் மீது எனக்குள்ள அன்பையும அது கடந்து நிற்கும். அஹிம்சா தர்மத்தின் மூலமாக என் வாழ்க்கையை இந்தியாவுக்குத் தொண்டுசெய்வதில் அர்ப்பணம் செய்திருக்கிறேன். ஹிந்து மதத்திற்கு வேர் போன்றிருப்பது அஹிம்சா தர்மமே யாகும்.

மகளிர் நிலை.

[பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மையார் எழுதியது.]

தற்காலம் நமது பெண்மக்களின் முன்னேற்றத்திற்காக கவலை கூர்ந்து தத்தமக்குத் தோன்றிய வழிகளில் சிந்தை செலுத்தாதார் மிகமிகச் சிலரேயாவர்.

பழமையான எல்லாக் கொள்கைகளையும் மாற்றிப் புதிய முறையில் அமைக்க விரும்புவோர் ஒரு சாரார்.

பழையன சில களைந்து புதியன சிலவற்றைத் தழுவுதல் சால்புடைத்தென்போர் மற்றொரு சாரார்.

யாவும் பழையபடியே இருத்தல் வேண்டுமெனக் கருதும் வேறு சிலரும் உளர். ஆகவே தற்காலம் மகளிர்நிலை ஓர் விதமான உறுதிகொண்டும் நிற்கவில்லை.

முதலாவது விவாக வயதை மட்டில் மாற்றி விடுவதால் தெய்வலோக வாழ்வு நம்முன் பிரவேசமாகுமென்போர் ஆவேசவாதமே தற்சமயம் பாரத தேசத்தில் எங்கும் எதிரொலி செய்கிறது.

உண்மையை ஆழ்ந்து நோக்குவோர்க்கு அதனாலேயே நமது விதியைத் தடுக்கவோ சுகவாழ்விற் றளைக்கவோ முடியாதென்பது புலப்படும். பெண்கள் இளமையிலிருந்தே வைகறைத் துயிலெழல், தண்ணீர் முகத்தல், இந்திய குடும்பங்களுக்கு இன்றியமையாத எல்லா வேலைகளிலும் பயிற்சி பெறுதல் முதலிய பண்

டைக்கால முறைகளினுல் உடல் நலமும் உறுப்புகளின் செம்மையும் வளர்ந்து பொலிவெய்தும் பிறந்த நாட்டு மொழி தவறவயதில் முதியவர்களிடம் கற்றலினுலேயே தெய்வ பக்தியும் தாய் மொழிப்பற்றும் தேசபற்றும் ஒக்க வளர்ச்சி பெற்று மலர்ச்சியடையும். அவ்வாறின்றி விடிந்தபின்னரும் கிடந்துறங்கி வீட்டு வேலைகளில் ஒரு சிறுபயிற்சியுமின்றி அன்னிய மொழிகளில் ஆர்வமபெற்று நவநாகரீக நோக்கங்களோடும் வளர்ந்துவரும் தற்காலப் பெண்களுக்கு விவாக வயதை உயர்த்தி விடுவதனுல் எதிர்பார்க்கும் அளவிற்கு நன்மை பெருகுமாவென்பதை ஆலோசித்தல் வேண்டும். விவாகவயதை எவ்வளவாக உயர்த்தினுலும் கருத்தரிப்பின் கணவனுடன் பிரியாமல் வசிக்க அனுமதிப்பதும் மனைவி தாயகஞ் சென்ருல் கணவனும் உடன்சென்று வதிவதும் மகவுயிர்த்த பின்னர், பிறந்த குழந்தையை தாய்ப்பால் மாறி இயற்கை உணவை உண்ணத்தொடங்கும் வரையிலோ அல்லது குறைந்த பட்சம் ஒரு வருடம் வரையிலோ கூட்டுறவின்றித் தனித்திருத்தல் வேண்டுமென்னும் பண்டைய வழக்கு உயிர்ப்பிக்கப்பட்டாலன்றி யாதுபயன் விளையும். இருபது வயது கடந்து விவாகம் செய்தாலும் தம்பதிகள் வரையறையின்றி இன்பம் நுகரத் தலைப்படுவரேல் விரைவில் மெய்ப்பொலி விழுந்து கண்கள் குழிந்து கைகால் துவண்டு குறைப்பிரசவம் கொலைப் பிரசவங்களுக்கு ஆளாகாமல் தடுக்கமுடியாது மருந்துண்போர் பத்தியவுணவைக்கொண்டு சுவையடக்குதல்போல மகப்பெற்ருேர் சிசுநலம் கருதிப் புலனடக்கி ஒழுகுவதே கடவுளின் இயற்கைச் சட்டம். அச்சட்டத்திற்கு கீழ்ப்படிவோரைக் காண்டலரிதாகிய இந்நாளில் இதர யுத்திகள் எவ்வளவு தூரம் பயன்படுமென்பதை அறிவுடையோர் ஆராய வேண்டியதே. இவ்வித புலனடக்கப் பயிற்சி இன்மையினுலேயே கருத்தரித்தலை தடுக்கும் இயற்கைக்கு மாருன கொடிய உபாயங்களைப்பற்றி எண்ணுவோரும் விவாதிப்போரும் எழுதுவோரும் இந்நாளில் பெருகிவிட்டனர். பெண்களை உயர்ந்த அந்தஸ்திலிருந்த எண்ணும் அனுதாபிகள் முதலில் தத்தம் குடும்பத்திலேயே புலனடக்கி வாழ்ந்துவரப் பயின்று பிறகு சகோதர மக்களுக்கு அறிவுறுத்தல் முறையாகும். இது

பற்றியே மகாத்மா காந்தியடிகளும் புலனடக்கத்திற்கு நேர்மையான உபாயம் உணவுப்பொருள்களில் ஏற்படும் புலனடக்கமேயெனப் புகன்றுள்ளார். இந்திய பழைய சிலர்களும் இதனை பிரதி மாதங்களிலும் போதரும் அமாவாசை, பௌர்ணமி, ஏகாதசி முதலிய திதி விரதங்களும் சித்திரை முதலிய நட்சத்திர விரதங்களும் வார விரதங்களும் இல்வாழ்வான் கட்டாயம் அனுஷ்டிக்க வேண்டியதென விதித்தனர். இதன் நுட்பம் இல்வாழ்வான் நாவடக்கம் புலனடக்கம் தூய்மை முதலிய பெறுதற்கு ஏற்ற முறையென்பதே உண்மை. தற்காலத்தில் இருட்டினால் அமாவாசையையும் நிலவினுதவியால் பௌர்ணமியையும் எளிதில் உணர்வோரேயன்றி இகா விரத தினங்களை அனுஷ்டிப்போர் மிக மிகச் சிலரே யாவர். விவாகத்தின் நோக்கம் நல்ல சந்ததி லாபத்திற்கேயன்றி நினைத்தபோதெல்லாம் இன்பமின்பமென எண்ணியெண்ணி இளைத்திளைத்துத் துன்புறுவதற்கல்ல. இவ்விஷயங்களில் சமுகக் கட்டுப்பாடு அரிய முயற்சியினால் கொள்ளல் வேண்டும். இதனை யறிந்துகொள்ள முடியாத நாம் சட்டத்தால் நமக்கு நாமே விலங்கிட்டுக்கொள்வது நகைப்பிற்கிடமேயாம்.

விடுகதைக் கொத்து.

(நாங்குனேரி சு. அருணாசலம் பிள்ளை.)

(பெண்பாலார் பெரிதும் விரும்புவரெனும் நோக்கோடு வரைவதாம். கற்றோர் எளிது, இலக்கணப் பிழையுளதெனக் கொள்ளற்க).

1. திரண்டுருண்ட மேனியான்
தேன்போல் தித்திப்பான்
கொடிக்கீழ் தொங்குவான்
கொண்டை அறுபடுவான் யார்?

2. பால் போன்ற மேனியர் பலரைக் கண்டேன்
பஞ்சவர் சேர்ந்து பந்தாடக் கண்டேன்
மேலோன் செய்பொறி வழியே போகக் கண்டேன்
மேனியுள்ளே அதன் வடிவு காணேனப்பா

3. வேலின் தலை போல் வான்
விளங்கு கைப் பிடியான்
சூடு தடுப்பான், சுடுகஞ்சி குளிப்பான் யார்

4. வாள்போல் நீண்டதை
வழு வழுப் பானதை
துண்டம் துண்ட மாக்கி
தூக்கித் தின்னக் கண்டேன

5, சுற்றி ஆணுவார்
நெற்றி முற்றும் கண்ணுவார் யார்?

(விடைமறு சஞ்சிகையில் வரும்)

குறிப்புகள்.

மழைவிட்டும் தூவானம் விடவில்லை: நமதுவேளாளனை ஆரம்பிக்குங் காலத்தில் ஊறு பல விளைத்த கர்வங்கொண்ட மக்கள் தங்கள் ஜம்பம் பலிக்காததால் அவர்கள் மனத்திடை பொருமை முளைத்து வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழுத்துதிர்ந்ததாய்த் தெரிகிறது. ஆனால் நாம் அவர்கள் அறியாமையால் ஊறு விளைவித்தார்கள், இப்பொழுது நன்னிலையிலிருக்கின்ருர்கள் என்று எண்ணியிருந்தோம். என்ருலும் அவர்களில் "பழைய கருப்பனே கருப்பன்" என்பதுபோல் சமீபத்தில் நம்மைப்பற்றி நமது நண்பரொருவரிடம் அகந்தையை அணிகலமாகக் கொண்டுள்ள ஒருவர் "இவர் பெரியவரா? பெரிய படிப்பாளியா? இவரைவிடப் பெரியவர்களும், பெரிய படிப்பாளிகளும் பலரிருக்க, இவர் பத்திரிகை நடத்தலாமா? பத்திரிகையில் பொதுவான விஷயங்கள்தானே எழுதுகிருர்". என்றெல்லாம் பேசினாராம். அவர் பேச்சிலிருந்து அவரது அறிவின் திறமும், உள்ளத்தின் உயர்வும், வாசகர்கள் ஊன்றியுணர்வார்களாக. இதுபற்றி மறுமுறை விரிவாக எழுதுவோம். கூடுமானல் ஆசாமியின் பெயரையும் வெளியிடுவோம்.

வேளாள சிகாமணி விண்ணுலகெய்தினர்:— உடன்குடியி லிருந்து கொழும்பு நகர் சென்று வியாபாரஞ் செய்து ஈட்டிய பொருள்களை தகுந்த முறையில் தான தர்மங்கள் செய்து வாழ்ந் துவந்த திரு. ச. க. ஆ பரமசிவன் பிள்ளை அவர்கள் வியாபாரத் தில் நேர்ந்துள்ள பொருள்ச் சேதத்தால் மனக் கவலை கொண்டு உடல் வன்மை குன்றி பிணி பல எய்தி இறுதியில் தமது 42-வது வயதில் சென்ற பிப்ரவரி மீ 8-உ சனிக்கிழமை மாலை சுமார் 6-30 மணிக்கு இவ்வுலக வாழ்வை நீந்தினர். பிள்ளையவர்கள் பிரிவு குறித்து நாம் பெரிதும் வருந்துகின்றோம். பிள்ளையவர் கள் ஆன்மா ஆண்டவடியில் வாழ்க.

டாக்டர், திரு. ஜெயராம் அவர்கள்:—இவர் இலங்கைக்குச் செல்லும் பிரயாணிகளைப் பரிசோதித்து அனுப்புவதற்காக அர சாங்கத்தாரால் நியமனம் பெற்றவர் இவரை நாம் சமீபத்தில் சந்திக்கவும் வேலையின் முறையைக் கவனிக்கவும் சந்தர்ப்பம் கிடைத்தது. நாம் கவனித்ததில் தமது வேலையில் திறமையும் அநுபவமும், ஆட்களின் நிலையை யுணரும் ஆற்றலும், கண்டிப் பும், நியாமும் உள்ளவராயிருக்கின்றார். தமிழிலும், மதத்திலும் பற்றுதலுடையவர். இருநூல்களிலும் நிரம்பிய ஆராய்ச்சி பெற் றவர். இவரோடு நாம் சுமார் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டி ருக்க நேர்ந்தது. இவர்போன்ற உத்தியோகஸ்தர்கள் பலரிருந் தால் நாடு நன்மை பெறுவது உண்மை. திரு. டாக்டர் ஜெயராம் அவர்கள் பற்பல பேறுபெற்று பல்லாண்டு வாழ்க.

மறுமுறையும் ஞாபகஞ் செய்கின்றோம்:— நமது "வேளா ளன்" சந்தா நேயர்கள் அனைவர்க்கும் மிகவும் சாக்கிரதையாகச் சரிபார்த்துப் பத்திரிகைகள் முறையே அனுப்பியும் சிலருக்குப் பத்திரிகை கிடைக்கப்பெறாத காரணம் நமக்கு விளங்கவில்லை ஆதலால் தபால் அதிகாரிகளுக்கு எழுதி தபால்ச் சேவகர்களை கண்டித்து வைப்பதோடு நமக்கு எழுதி கிடையாமற்போன பிர தியைப் பெற்றுக்கொள்ளவேண்டுகின்றோம் இவ்விதஞ் செய் யாமல் நமது பேரில் வீணான குறை சொல்லுவதில் பயனில்லை. சந்தாப் பாக்கியுள்ள நேயர்களெல்லாம் இன்னுஞ் சுணக்காமல்

பங்குனி மீ 30 உக்குள் சந்தாவை அனுப்பிவைக்கவேண்டுகின்ளும். பன்னிரண்டு பத்திரிகைகளேயும் பெற்றுக்கொண்டு சந்தாவை அனுப்பாமல் மௌனஞ் சாதிப்பது எவ்வகையிலும் பொருத்தமற்றதாகுமென்பது உங்கள் மனமே சொல்லும்.

மஹாா சந்நிதானத்தின் மறைவு: சைவாதீனங்களி லொன்ருகிய திருப்பனந்தாள்மடாதிபதியாக வீற்றிருந்த க்ரசிவாசி ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் சென்ற சிலகாலமாக உடல் வலிமை குன்றி நோயுற்றிருந்து மாசி மீ 13 உ மாலேயில் இறைவனடி எய்தினர். சுவாமிகள் நல்ல கல்விமான், தென் மொழி வடமொழி இரண்டிலும் விற்பனர். சுவாமிகள் மறைவு குறித்து நாம் மனவருத்தமடைகின்ளும். புதிய மடாதிபதியாக வீற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளுக்கு நல் வரவு கூறுகின்ளும். சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் சைவமும், தமிழும் தழைத்தினிது ஓங்க தருந்தன செய்யத் தாழ்மையாய் வேண்டுகின்ளும்

உத்தியோக மாற்றம்: தூத்துக்குடியில் சப்மேஜிஸ்திரேட்டாக உத்தியோகம் செய்துவந்த திரு. திருமலேயப்ப பிள்ளே அவர்கள் விளாத்திகுளத்திற்கு மாற்றப்பெற்றிருக்கிறார்கள். பிள்ளேயவர்கள் தூத்துக்குடியிலிருந்து உத்தியோகஞ் செய்தால் நகர மக்களுக்கு நீதியான முறையில் பல நன்மைகள் ஏற்பட ஏதுவாகவிருக்கும். பிள்ளேயவர்கள் விரைவில் மாற்றப்பெற்றமை குறித்து நகரமக்கள் சற்று வருந்துவதோடு நாமும் வருந்துகின்ளும்.

பின்பும் பிரயாணம்: தை திங்கள் முதல்நாள் இங்கிலாந்திலிருந்து இங்கு வந்த திரு. ந. சண்முகசுந்தரம் பிள்ளேயவர்கள் மறுபடியும் இங்கிலாந்து செல்லவேண்டி சென்ற மாசி மீ 27 உ காலேயில் பிரயாணமாகிவிட்டார் பிள்ளேயவர்கள் பாரீஸ்டர் பரீட்சையில் படித்தத தேர்ச்சிபெறவேண்டியே மீண்டும் இங்கிலாந்து செல்லுகின்ருர். பிள்ளேயவர்களுக்கு பரீட்சை தேரவும் உடல் நலன் பெறவும் பகவான் அருள்பாலிப்பானுக.

பல்லோர் புகழும் பண்டித மணி: தற்காலம் நாகர் கோவிலில் வசித்துவரும் திருவனந்தபுரம் திரு. குமரேச பிள்ளேயவர்கள்

இவண் இராமாயாண சம்மந்தமாக பல பிரசங்கங்கள் செய்தார். பிள்ளையவர்கள் பிரசங்கம் சமரசமாகவும் காலத்துக்கேற்ற முறையிலும் பண்டிதர் பாமரர் பலரும் போற்றும் முறையிலுமிருந்தது பிள்ளையவர்களை நகரமக்கள் ஆதரித்தலவசியமெனக் கருதுகின்றோம்.

அறப்போர் ஆரம்பம்: காந்தியடிகள் தலைமையில் இந்திய மக்களின் விடுதலையைக் குறித்து அரசாங்கத்தாருடன் அஹிம்சையாகிய ஆயுதங்கொண்டு அறப்போர் ஆரம்பமாயிருக்கிறதை அனைவரும் அறிவர். அறப்போர் குறித்த பலனைத் தருமென்ற உறுதியுடன் காந்தியடிகள் போர் ஆரம்பிக்கவில்லை. தற்கால ரீதியில் இது தவிற வேறு வழி இல்லையென்றே கருதுகின்றார். அறப்போர் ஆரம்பித்தால் அடக்கு முறைகளும் துப்பாக்கிப் பிரயோகங்களும் வரக்கூடுமெனவும் கருதுகின்றார். போர்வீரர்களுக்குரிய 19 நிபந்தனைகளை மிக ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறார்கள். அவைகள் அனைத்தும் செப்புப் பட்டயத்திலெழுதி செப்பனிட்டு வைப்பதற்குரியது. அறப்போர்க்குரிய போர்வீரர், அடக்கம் பொறுமை தியாகம் (உடலினிடத்துப்பற்றின்மைகளை) அனுபவத்தில் காட்டவேண்டும். இந்து மதத்தில் நம்பிக்கை மிக்குடைய உண்மையுணர்வுடையார்க்கே ஒத்தது. இத்தகைய மக்கள் எவ்வளவு பேர் நம்நாட்டில் இருப்பரோ? அறப்போரில் எவ்வளவு பேர் கலந்து கொள்வரோ? ஆண்டவனுக்குத் தான் தெரியும். போர்முனை சென்றவர்களில் புறங்காட்டாது நிற்போர் எவ்வளவு பேரோ? எல்லாம் இறைவனே அறிவான். அடிகள் அறப்போர் ஆண்டவனருள்பெற்று நலன் பெறவேண்டுமாய் இந்தியமக்கள் இறைவனை இறைஞ்சல் வேண்டும்.

விடுமுறை நாள். தூத்துக்குடியில் சில மாதங்களாக வியாபாரஸ்தலங்களை மாதத்தில் ஒரு நாள் மூடிவிட வேண்டுமென்ற கிளர்ச்சி நாளுக்கு நாள் வலுத்து வருகின்றது. மாசிமாதக் கடைசி ஞாயிறு அன்று ஜவுளி, ஷாப், ரொட்டி, காககக்கடை வர்த்தகர்கள் ஒன்றுபோல் கடைகளைப் பூட்டிவிட்டனர். பலசரக்கு, நவதானியம் முதலிய கடைகளையும் மாதம் ஒரு முறை பூட்ட

வேண்டிய ஏற்பாடும் நடைபெற்று வருகின்றது. ஆனால் கடை பூட்டும் நாள் எல்லோருக்கும் ஒன்றுபோலிருக்கவேண்டும். ஒவ்வொரு வியாபாரிகளும் ஒவ்வொரு தினங்களைக் குறிப்பிடுதல் கூடாது. குறிப்பிட்டால் ஒற்றுமையின் உணர்ச்சியைக் குறைத்துக் காட்டுமெனக் கருதுகின்றோம். விடுமுறைநாள் வெற்றி பெறுக.

விதைத்த விதை முளைத்தது:- நாம் சுமார் ஒரு வருடத்திற்கு முன் **தங்க வியாபாரிகள் சங்கம்** என ஒரு சங்கம் காசுக்கடை வியாபாரிகளைக் கொண்டு நிறுவி சில திட்டங்களும் செய்து மாதம் ஒருநாள் விடுமுறையாக அமைக்க வேண்டுமென்றும் கூறியது குறித்த வியாபாரிகளுக்கு ஞாபக மிருக்கலாம். அது அப்பொழுது பலன் தரவில்லை. சங்கமும் நடைபெறவில்லை. ஆனால் இப்பொழுது நாம் முன்விதைத்தவிதை முளைந்து விட்டது. சில நண்பர்களின் சொற்பப்பிரயத்தினத்தால் எல்லாக் காசுக்கடைகளும் சென்ற மாசி மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையன்று பூட்டப் பெற்றது. மறு முறை நடை பெறும் விடுதலை நாளில் நமது சகோதர வியாபாரிகள் சங்கத்தைக் கூட்டி பலப்படுத்தி ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் வேலை செய்யவேண்டுகின்றோம்.

நம் மக்கள் நிலை:- நம் மக்களில் ஒரு சாரார் அரசியல் வேண்டாமென்கின்றனர். மற்றொரு சாரார் சமயம் வேண்டாமென்கின்றனர். வேறொரு சாரார் இரண்டும் வேண்டாமென்கின்றனர் இவ்விரண்டு மின்றி நமது முன்னேற்றம் எப்படி கைகூடுமென்பது நமக்கு விளங்கவில்லை. உடல் வாழ்விற்கு அரசியலும் உயிர் வாழ்விற்கு சமயமுமே அவசியமாகும்.

மதிப்புரை.

களந்தைப் புராணம்:. இஃது களக்காடு புலியூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ கைலாசநாத தேசிகர் அவர்களால் இயற்றப் பெற்று மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் திரு. மு. ரா. அருணசலக் கவிராய ரவாகளால் பரிசோதிக்கப் பெற்று களக்காடு திரு.

சி. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை யவர்களால் அச்சியற்றப் பெற்றிருக்கிறது. ஸ்ரீ ராமபிரானை வஞ்சித்து சூதால் இலக்குவன் துணையினை நீக்கித் தனித்திருந்த சீதையை இலங்கை வேந்தன் களவெடுத்த காடுடைய ஊராகலின் கடை குறைந்த களவுச் சொல்லடையடுத்த காரண இடுகுறியாகக் "களக்காடு" என்று இவ்வூர் பெயர் பெற்றது. களக்காடு இன்றும் நிலத்தொடு நீர்வளஞ்சுரக்க காவொடு வயல் நிதி கொழிக்கின்றது. இந்நூல் பன்னிரு சருக்கத்தில் விருத்தப் பாவால் பாடப்பெற்றதாயும், தலம், தீர்த்தம், மூர்த்திகளின் பெருமையும் இந்நூலில் எங்கும் பார்க்கக்காணலாம். இதனை அச்சியற்றிய அன்பர் ஆங்கிலம் பயின்று அரசாங்க நீதி இலாகா (போலீஸ்) அதிகாரப் பதவியிலிருப்பவர்; எனினும் தாய்மொழியினிடத்தும் சைவத்தினிடத்தும் அளவிலா ஆர்வம் கொண்டுள்ளவர் என்பது மிகையாகாது. இன்னவர் இன்புற்று வாழ்க. இந்த நூலை சைவ மக்கள் ஆதரிப்பார்களாக.

காலண்டர் வரவு

"ஞான அரசு" பத்திரி காலயம் பேட்டையிலிருந்து வெளியிட்டிருக்கும் தினசரிச் சீட்டுள்ள காலண்டர் வரப்பெற்றோம். பத்திரிகையின் அபிவிருத்தி கருதி பொருளைச் செலவு செய்து காலண்டர் வெளியிட்டிருக்கும் பத்திராதிபரின் நன் முயற்சி பாராட்டத்தக்கது.

திருநெல்வேலி மேலரதவீதியில் காசுக்கடை வியாபாரஞ் செய்து வரும் திரு மு. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள் 12 சீட்டுகள் அடங்கிய பெரியசயிஸ் காலண்டர் வரப்பெற்றோம். காலண்டரில் குறிப்பான விசேட தினங்களும் அவர்கள் வியாபார விளம்பரங்களும் காணப்பெறுகின்றன.

பித்தன்: இஃதொரு மாதப் பத்திரிகை. இஃது வனமலர்ச் சங்கத்தாரால் வெளியிடப் பெறுவது. இதன் ஆசிரியர் திரு. ம. ப. பெரியசாமி யவர்களாவர். அரசியல், சமுகச் சீர் திருத்தம், இயற்கை அழகு முதலியன குறித்த கட்டுரைகள் பல மிளிர்கின்றன. இதன் இரண்டாவதாண்டு மூன்றாவது இதழ் நமது

பார்வைக்கு அனுப்ப பெற்று வரப்பெற்ரேம். இதன் வருடச் சந்தா ரூபா ஒன்று. விலாசம் "பித்தன்" காரியாலயம் 49 பசார் ரோடு, இராயப் பேட்டை, சென்னை. என்றெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

சித்தாந்த சைவப் பஞ்சாங்கம்:. வருகிற சித்திரை மாத முதல் ஆரம்பமாகும் பிரமோத வருஷப் பஞ்சாங்கம் ஒன்று இவ் வருட முதல் புதிதாய்க் கணிக்கப்பெற்று அச்சியற்றி வெளிவந் திருக்கும் பிரதி நமது பார்வைக்கு அனுப்பி வந்துளது. இதனை கணித்தவர் பத்தமடை திரு. P. முத்துசுவாமிப் பிள்ளையவர்களா வர். இதனை ராஜவல்லிபுரம் நடேச சபையார் அச்சியற்றி வெளி யிட்டிருக்கின்றனர். இதன் பிரதிகள் பெரும்பாலான பெரிய ஊர் களிலெல்லாம் கிடைக்கும். இதன் விலை 0—1—6.

தமிழ் மக்கள் சைவ மக்கள் அனைவரும் இதனை வாங்கி ஆத ரித்த லவசியம்.

காந்தாமணி அல்லது உண்மைக் காதல்: இது ஜோதிடத் தின் திறத்தைப்பற்றிக் கதாரூபமாக எழுதப்பட்டுளது. இதன் ஆசிரியர் ஸ்ரீமாந் K. சங்கரநாராயணன் அவர்கள். கரிசூழ்ந்தமங் கலம், சேர்மாதேவி S. I. R. இதன் விலை 0—1—6.

ஆவரம் பூ காப்பித்தூள்: காபி சூட்டை உண்டாக்கும் இயல்புடையது. இஃது குளிர் தேசவாசிகளுக்கே வேண்டப் பெறுவது. குளிர் தேச வாசிகளாகிய மேல் நாட்டார் கைக் கொள்ளும் பற்பல முறைகளை நாகரீகமென்று நாமும் கைக் கொள்ளுகின்றோம். அதில் இஃதும் ஒன்று. காபி குடிக்கும் முறையை விட்டு காபிக்குப் பதிலாக ஆவாரம்பூ காபியை உபயோ கித்தால் உடலுக்குச் சுகத்தைக் கொடுக்கும். ஆவாரம் பூ காபித் தூள் செய்யும் கம்பெனியார் ஒரு வாரத்திற்குப் போதுமான தூளை (பவுடரை) நமக்கு அனுப்பிவைத்தார்கள். அதனை நாம் உபயோகித்ததில் மிகவும் குளிமையான வாசனையுடனிருக்கிறது. காபிக்கொட்டைத் தூளுக்குப் பதில் இதனை உபயோகிக்கலாம். புராதீன முறையான இம்முறையை இந்தியமக்கள் கைக்கொண்டு

ஆதரித்தல் அவசியமாகும். இதன் விலாசம் ராமசுவாமி மாணிக்கம் கம்பெனி, இந்தியன் ஆவாரம் பூ காபி ஒர்க்ஸ், வெங்கிட்டங்குரிச்சி, பரம்பக்குடி, (P. O.) S. I. R.

நிலவுலக நிகழ்ச்சிகள

உலகத்தில் சீனுத்தேசத்தில்தான் நிலக்கரி அபரிமிதமாகக் கிடைக்கிறதாம். அங்கு சுவார் மூன்று லட்சம் சதுர மைல் தூரம் பரவியிருக்கிறதாம்.

மிக்ககொடூரமானதும், கெடுதலுமான விஷம் ஓர்விதமஞ்சள் நிறப்புஷ்பமுள்ள காட்டுச் செடிகளிலிருந்து உண்டாகின்றனவாம்.

திருச்செந்தூர் தாலுகா அங்கமங்கலத்தைச் சேர்ந்த குரும்பூரில் வியாபாரஞ் செய்கின்ற சிவநேசர்களெல்லாம் சென்ற இரண்டுமாதங்களாக ஒவ்வொருமாதக் கடைசி வெள்ளிக்கிழமை யன்று தங்கள் கடைகளை மூடிவிட்டு சற்காலட் சேபங்கள் செய்வது வழக்கமாகவிருக்கிறது. இவ்விருமாதங்களிலும் நம்மில் ஒருவரான திரு. அ. ஆறுமுகம் பிள்ளையவர்கள் கடையைத்திறந்து வைத்திறந்தது மிகவும் வருந்தத்தக்கது. மறுமாதத்திலாவது பிள்ளையவர்கள் நம்முடன் ஒற்றுமைப்பட்டு நடக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ள வேண்டும். மாசி மீ கடைசிச் சுக்கிரவாரத்தன்று இரவு குமரன் அன்கோ மாக்கடையில் "சைவர் சங்கம்" ஒன்று திரு. A. P. சண்முகம் பிள்ளையவர்களால் திறந்து வைத்து திரு. A. M. சங்காக்குமாரு பிள்ளை யவர்களால் சைவசமயம் என்பதைப்பற்றி விரிவாகப் பேசப்பெற்று திரு. அ. கந்தசாமி செட்டியாரவர்களால் சங்கம் விருத்தி படையவேண்டிய முறையைப் பற்றியும் சைவ சமயத்தைப்பற்றியும் பேசப்பெற்று கூட்டம் வந்தனத்துடனும் மங்களத்துடனும் கலைந்தது என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

திருச்செந்தூரில் மாசித்திருநாளை முன்னிட்டு சைவ சமயம் பரவுதற்பொருட்டுத் திருநாள் காலங்களில் நகரில் பல பகுதிகளிலும் சைத் திருவாளர்கள் பலரால் பற்பல சொற்பொழிவுகள்

செந்திலாதிபன் திருவருட் சங்கத்தின் ஆதரவில் நடை பெற்ற தெனக் காரியதரிசி அறிவிக்கிறார்.

தூத்துக்குடி வேளாளர் வாலிபர் சங்கத்தின் ஆதரவில் திரு. சி வ. அவர்கள் இளைய மகன் திரு. ந. சண்முகசுந்தரம் பிள்ளை யவர்கள் மேல் நாடுசென்று வந்தமைக்காகவும் மறுபடியும மேல் நாடு செல்ல விருப்பதற்காகவும் சென்ற மாசி ஸ்ரீ 23 உ வியாழக் கிழமை இரவு சுமார் 8-மணிக்கு சிற்றுணவு விருந்து நடத்தப் பெற்றது. திரு. இ வெண்ணிமாலை பிள்ளை யவர்கள் B. A. B. L., உபசாரமாகச் சிறிது நேரம் பேசினார்களென அறிவிக்கப் பெறுகிறது.

தூத்துக்குடி சண்முக சச்சிதானந்த சபையின் மூன்றாவது ஆண்டு விழா திரு. ராஜாராம் பாண்டியன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக இருதினங்களிலும் நடைபெற்றது. தலைவர் முன்னுரைப் பிரசங்கம் அரசியலும் சைவமதமும் கலந்ததாகவே யிருந்தது. இவர்கள் போன்ற அரச குடும்பத்தினர் மதமும் அரசியலும் இன்றியமையாத தென்றுணர்ந்து பகிரங்க பிரசாரஞ் செய்ய முன் வந்தால் நாடு நலம் பெறும். முதல் முதலாக முன் வந்து மற்றவர்களுக்கு வழி காட்டிய திரு. ராஜாராம் பாண்டிய னவர்களுக்கு இந்திய மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்களென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

ஆண்வேடம் பூண்டு திருடிய பெண்.

தேகக்கட்டும், உயரமும், கறுப்பு நிறமும் வாய்ந்த சுமார் 18 வயதுள்ள சாரதா தாஸி என்னும் பெண் 21—2—30ல் அலிப்பூர் டிப்டி மாஜிஸ்திரேட் முன்பு நிறுத்தப்பட்டாள். அது போது அவள் ஆண் உடை தரித்திருந்தாள். இம்மாது பகலில் குடும்ப ஸ்திரீயாகவும், இரவில் திருடனாகவும் இருப்பதாகக் கூறப்பட்டது. அலிப்பூரிலும், அதல் சுற்றுப் பக்கங்களிலும் பல களவுகள் நடந்திருக்கின்றன. போலீஸார் பெண்ணைக் களவாடிய பொருள்களுடன் கைது செய்தனர்.